www.tamilarangam.net

தமிழீழ மக்கள் கட்சி
சுதந்திரம் — தமிழீழம் — சமத்துவம்

தமிழீழ மக்கள் கட்சியின் அரசியல் ஏடு

# தமிழீழம்

மக்களுக்கே அனைத்து அதிகாரங்களும்

ஆனி 1999 | இதழ் — 3

"பார்த்தியளா, நம்ம புள்ளைகள ஆமிக்கு எடுத்து நம்மளையே அழிக்க திட்டம் போட்டாங்க, நம்மாக்கள் நல்லா பாடம் படிப்பிச்சிருக்காங்க!"

# தேசத்தின் குரலாய்...

மடு பிரதேசத்தை ஆக்கிரமித்துள்ள சிறீலங்கா படைகள், தமது ஆக்கிரமிப்பு வெற்றியை, ஜுலை மாத மடு திருவிழாவை பகட்டாக கொண்டாடுவதன் மூலம் வெளிப்படுத்த தலைப்பட்டுள்ளன. இதற்காக, மடு தேவாலய பிரதேசத்தில் தஞ்சமடைந்திருக்கின்ற ஆயிரக்கணக்கான தமிழ்மக்களை இப்பகுதியிலிருந்து வெளியேற்ற சிறீலங்கா இராணுவ தலைமையகம் திட்டமிட்டுள்ளது. இராணுவத்தின் இந்த முயற்சியை கடுமையாக எதிர்த்துள்ள கத்தோலிக்க ஆயர் சபை, மடுவில் இராணுவம் நிலைகொண்டிருக்கும் வரை திருவிழா நடத்தப்பட மாட்டாது என முடிவு செய்துள்ளது.

சிறீலங்கா இராணுவம் மடுவை ஆக்கிரமித்தபோது, அங்கு தஞ்சமடைந்துள்ள தமிழர்களுக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது என்றும் இராணுவத்தின் நடத்தைகளால் தேவாலயத்தின் புனித தன்மை களங்கப்படுத்தப்படுகின்றது என்றும் விளக்கி, இராணுவத்தை தேவாலய பிரதேசத்திலிருந்து அகற்றும்படி மன்னார் ஆயர் சிறீலங்கா ஜனாதிபதிக்கு(முப்படை தலைவருக்கு) வேண்டுகோள் விடுத்திருந்தார்.

மன்னார் ஆயரின் இந்த அறிக்கை வெளிவந்தவுடனேயே, பௌத்த-சிங்கள பேரினவாத சக்திகளும் தொடர்பு சாதனங்களும் மட்டுமன்றி, சிங்கள கத்தோலிக்கர்களும் கூட, அதற்கு எதிராக கடும் கண்டனத்தை தெரிவித்தனர். மன்னார் ஆயர், மடுவை புலிகளுக்கு விட்டுக்கொடுக்கும்படி கூறுகிறார் என்று அவரை கண்டித்ததோடு, மடுவை மீட்டெடுத்தமைக்காக சந்திரிகாவுக்கும் அரச படைகளுக்கும் தமது நன்றிகளையும் தெரிவித்துள்ளனர்.

ஒரே மதத்தை பின்பற்றுகின்ற தமிழ் மற்றும் சிங்கள கத்தோலிக்க மக்களிடையே இவ்வாறு வேறுபட்ட பிரதிபலிப்புகள் வெளிப்படக் காரணம் என்ன? இங்குதான் மதம் ஒன்றாக இருந்தபோதும், தமிழ், சிங்கள கத்தோலிக்கர்கள் இருவேறு தேசங்களை சேர்ந்தவர்கள் என்ற உண்மை துலக்கமாக வெளிப்படுகின்றது. சிங்கள கத்தோலிக்கர்களின் குரல்கள் சிறீலங்கா அரசுக்கும் படைகளுக்கும் ஆதரவாக அமைந்து, சிங்களதேசத்தின் [illegible] தமிழ்த்தேசத்தின் [illegible] ஒலித்திருக்கின்றது.

## தேர்தல்கள்: நம்மை பலிகொள்ளும் கருவிகள்!

சிறிலங்காவில் சிங்கள தேசத்தவருக்கு இது தேர்தல் ஆண்டு. தத்தமது வெற்றியை உறுதிப்படுத்திக்கொள்ள சிங்கள கட்சிகள் வியூகங்கள் அமைக்கத்தொடங்கியுள்ளன. பொதுசன முன்னணி அரசாங்கம் இராணுவ வெற்றிகளையும் அரசியல் வெற்றிகளையும் சமகாலத்தில் குவித்து விடவேண்டும் என்பதை இலக்காக கொண்டு காரியங்களில் இறங்கி விட்டது. சிங்கள அரசுத்தலைவர் மீண்டும் சமாதானத்திற்கு அறை கூவுகின்றார். எவரையும் இருதடவை ஒரேவிதமாக ஏமாற்ற முடியாது. சென்ற தடவை சமாதான கோசம் இத்தடவை எடுபடாது. எனவே போர்முனையில் பலத்த வெற்றிகளை பெற்றாக வேண்டும், சிங்கள இனவாத உணர்வுகளை அதன் உச்ச பட்சத்தில் பயன்படுத்தி மீண்டும் ஒரு 60 வீத வெற்றியை பெறவேண்டும், எனவே தமிழீழத்தின் எஞ்சிய பகுதிகளையும் விரைவில் ஆக்கிரமித்து விடவேண்டும், அல்லது அப்படியொரு தோற்றப்பாட்டையாவது ஏற்படுத்தி விட வேண்டும். இவையனைத்தையும் சாதிப்பதற்கு முப்படைகளை சமகாலத்தில் நகர்த்துவது, படைபலத்தை பெருக்குவது நோக்கி அரசு நகர்கின்றது. படைஅதிகாரகளின் குழுக்கள் தாய்லாந்து நோக்கியும் இந்தியா நோக்கியும் மற்றும் இரகசியமாகவும் பயணங்கள் மேற்கொண்டுள்ளன. ஏற்கனவே படைக்களங்களும் குவிக்கப்பட்டுள்ளன என்பவை அன்றாட செய்திகளாகும்.

அரசியல் வெற்றிகள் என்று சொல்வதற்கு பொதுசனமுன்னணியிடம் எதுவுமில்லை, யூ.என்.பி இன் கடந்த கால கொடுமைகளை பற்றி பேசுவதை தவிர. தற்போதைய அரசியல் உத்தி என்பது, ஈழத் தமிழர், முஸ்லீம் மக்கள், மலையகத் தமிழர்களின் அமைப்புகளை வளைத்துப் போடுவதாக மட்டுமே உள்ளது. ஒரு புறம் சக தேசங்களை நசுக்குவதில் உக்கிரம், மறுபுறம் இந்த அமைப்புகளை வளைத்து போடுவதில் தீவிரம். இது முரண்நகைதான்.

அடக்கப்படும் தரப்புகளின் அமைப்புகள் தற்போதைக்கு எந்த சிங்கள கட்சிகளுடனும் அணிசேரும் வாய்ப்புகள் அரிதாகவே உள்ளது. அங்கெல்லாம் அகநெருக்கடிகள் தீவிரமடைந்து விட்டன. தனிதனியாக தேர்தலில் குதிப்பது, கிடைக்கும் சொற்ப ஆசனங்களை வைத்துக் கொண்டு பலவீனமாக அமையப்போகும் அடக்கு முறை அரசாங்கங்கத்திற்கு அடுத்த தேர்தல் வரை துணைபோவது, இதுவே இன்றைய போக்கு.

அடக்கப்படும் தேசங்களின் புரட்சிகர, முற்போக்கு ஜனநாயக சக்திகளின் தோள்களில் பொறுப்புகள் உள்ளன. தத்தமது மக்களை அணிதிரட்டி போராடும் வல்லமை கொண்ட தாபனங்களை உருவாக்கி தமது நீண்ட கால இலக்குகளை

(பார்க்க 3ஆம் பக்கம்)

## மறைக்கப்பட்ட உண்மைகள்

ஆசியாவில் இயங்குகின்ற "விருப்பத்திற்கு மாறாக காணாமல் போனோர் அமைப்பு" மே மாதத்தின் இறுதிவாரத்தை, விருப்பத்திற்கு மாறாக காணாமல் போனோர் வாரமாக அனுஷ்டிக்கும்படி அறிவித்திருந்தது. இந்த அமைப்பின் அறிக்கையின்படி, இலங்கையில் கிட்டதட்ட 32000 பேர் விருப்பத்திற்கு மாறாக காணாமல் போயுள்ளதாக குறிப்பிட்டிருக்கின்றது. எனினும் இந்த கணக்கில், தமிழீழத்தில் காணாமல் போயுள்ள தமிழ்மக்களின் எண்ணிக்கை உள்ளடக்கப்படவில்லை என்றும் அது அறிவித்திருக்கின்றது.

சிறிலங்கா அரசின் ஆக்கிரமிப்புக்கு எதிரான இரு தசாப்த கால போராட்டத்தில், எமது மக்களில் ஆயிரக்கணக்கானோர் சிறிலங்கா படைகளினால் கைது செய்யப்பட்டு காணாமல் போயுள்ளனர். இவர்கள் குறித்த எந்த தகவலையும் இன்றுவரை சிறீலங்கா அரசு வெளியிடவில்லை. ஒருபுறம், சிறீலங்கா படைகளின் அடக்குமுறைகள் காரணமாக, காணாமல் போனோர் பற்றி உத்தியோகபூர்வமாக முறைப்பாடு செய்யவோ, அவர்கள் பற்றிய தகவல்களை தெரிவிக்க கோரி ஜனநாயக ரீதியில் ஆர்ப்பாட்டங்கள் செய்யவோ முடியாத நிலையில் எமது மக்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

மறுபுறம், மனித உரிமைகளுக்காக செயற்படுகின்ற அமைப்புகளின் அரசியல் ஓரவஞ்சனையை நாம் கேள்விக்குள்ளாக்க வேண்டும். யுத்த நிலைமை காரணமாக, காணாமல் போயுள்ள தமிழ்மக்களின் எண்ணிக்கையை கணக்கிட முடியாதிருப்பதாக இவர்கள் கூறுகின்றனர். ஆயினும், தமிழீழம் போன்றே யுத்த சூழலுக்குள்ளாக்கப்பட்டுள்ள பொஸ்னியா, கொசோவா போன்ற இடங்களிலும், இந்தோனேசியா, பர்மா போன்ற அடக்குமுறை அரசுகளின் ஆட்சி நிலவுகின்ற நாடுகளில் மட்டுமன்றி, சிறீலங்காவிலும் கூட காணாமல் போயுள்ளவர்களின் எண்ணிக்கையை கிட்டத்தட்ட சரியாக கணக்கிட முடிந்திருக்கின்றது. [illegible]ன், இது எவ்வாறு சாத்தியம்?

(பார்க்க 3ஆம் பக்கம்)

உள்ளே...

- ✍ மக்கள் அதிகாரம்
- ✍ அதிகரித்து வரும் பெண் போசகர்கள்
- ✍ முஸ்லிம் தேசம்
- ✍ தமிழீழ விடுதலையும் சர்வதேசத் தலையீடும்

**எமது இலட்சியம் சுதந்திர தமிழீழம்**

www.tamilarangam.net

# தூர நோக்கு நமக்கு வேண்டும்!

நம் தேசியத்தை இல்லாதொழித்திட அவர்கள் இன்றல்ல என்றோ திட்டமிட்டு விட்டார்கள். இன்று வரை அவர்களின் இரகசிய திட்டங்கள் இடைவிடாது நடைமுறைப்படுத்தப்படுகிறன. சிங்கள அரசுருவாக்கம் தொடங்கிய காலம் தொட்டு எமது தேசிய இருப்பின் அனைத்து சுவடுகளையும் பலவீனப்படுத்தவும் இல்லாதொழிக்கவும் அவர்கள் ஓய்வின்ற செயற்படுகின்றார்கள். நாம் இன்னும் இந்த தேசிய அழித்தொழிப்புத் திட்டத்தை தேசமென ஒருமித்து எதிர்கொள்ளவில்லை. எம்மில் கணிசமானோர் எதிரிகளாக அவர்களை இனங்காணாததால் பேச்சுவார்த்தை சமரசம் என காலத்தை இழுத்தடித்துவிட்டோம். அவர்கள் நன்றாகவே இந்த அவகாசங்களை பயன்படுத்திக்கொண்டார்கள்.

இவையனைத்தையும் மீறி நமது விடுதலை போராட்டம் உக்கிரமடையாமல் இல்லை. தமிழீழ விடுதலைப்போராட்டத்தை முற்றிலுமாக நசுக்கி, நம் தேசத்தை காலாகாலத்திற்கும் அடிமைப்படுத்திடும் நோக்கில் சிங்கள சோவினிஸ்டுகள் தமது நீண்ட காலத் திட்டங்களை இரகசியமாகவும் பகிரங்கமாகவும் முன்னெப்போதையும் விட தீவிரமாக நடைமுறைப்படுத்தி வருகின்றனர்.

சிங்கள ஆளுங்குழுமத்தின் அனைத்துபிரிவினதும் பொது இலக்கு அனைத்து தமிழ்தேசிய அடையாளங்களையும் அதன் இருத்தலுக்கான அடித்தளங்களையும் இல்லாதொழிப்பதேயாகும். படைகளை கொண்டு, நிதிவளங்களை கொண்டு, நிர்வாக அதிகாரங்களை கொண்டு, பொருள்பண்டங்களின் மீது கட்டுப்பாட்டைக்கொண்டு, புதைபொருள் ஆராய்ச்சிகளை கொண்டு, கல்வியை பிடுங்குவதை கொண்டு, மருந்துகளை தடைசெய்வதைக் கொண்டு... இப்படி எல்லா வழிகளிலும் அவர்கள் எம்மை அழித்தொழிக்க முயலுகின்றார்கள்.

பாருங்கள் படைகளையும் ஆயுதங்களையும் கொண்டு அவர்கள் நம் தாயகத்தில் இராணுவக்குடியிருப்புகளை நிறுவுகின்றார்கள். தாயகத்தை துண்டாடுகின்றார்கள். வளமான காணிநிலங்களை அன்று முதல் இன்று வரை பறித்து வருகின்றார்கள். தேசியஒடுக்குமுறைக்கு எதிராக தீர்க்கமாயும் தீவிரமாயும் போராடும் இளம் தலைமுறையினரை கொன்று குவிக்கின்றனர். இதன் மூலம் நமது தாயகக்கோட்பாட்டை ஆதாரமற்றதாக்குவதும், ஒட்டுமொத்தமாக நம் தேசத்தில் மனிதவள வறுமையை உருவாக்குவதும் சிங்கள இராணுவ தலைமையின் இலக்குகளாகும்.

சிறிலங்காவில் இருந்த நம் பொருளாதார வளங்களை சட்டங்கள் மூலமும் அரசபயங்கரவாதம் மூலமும் குண்டர்கள் மூலமும் என்றோ பறித்தெடுத்தவர்கள் இன்று நம் காலடிக்கு வந்து விட்டார்கள். தாயகத்தின் கடல்வளம், விவசாயம், சிறுதொழில்துறைகள், வனவளம், இவற்றை பறித்தும் முடக்கியும் நமது மூலதன திரட்சியை இல்லாதொழித்து ஓட்டாண்டியாக்க முயன்று வருகின்றார்கள். ஆளுங்கும்பலின் நிதித்துறை பொருளாதாரதுறை சக்திகள் இதன் பின்னணயில் செயல்படுகின்றன.


சிறிலங்கா கல்விக்கூடங்களை எமக்கு கதவடைப்பு செய்தார்கள். இப்போது நமது தாயகத்தின் கல்விக்கூடங்களை ஆக்கிரமித்து கூடாரமடித்துள்ளனர். கல்விக்கான வாய்ப்புகளை பறித்து நம்மை அறிவு வலிமையற்றவர்களாக்க திட்டமிட்டு செயற்படுகின்றார்கள்.

புலம்பெயர்ந்துள்ள நம்மவரிடம் இருந்து இங்கு பெறப்படும் வருவாயின் பெரும்பகுதியை மிரட்டியும், கொள்ளையிட்டும், சுரண்டியும் பிடுங்கிக்கொள்கின்றார்கள்.

நீண்ட பொருளாதார தடைகள் விதித்துள்ளார்கள், மருந்துகளை தடைசெய்து மக்களை நோயாளிகளாக்கப்பார்க்கின்றார்கள். ஆக்கிரமிக்கப்பட்ட எமது மண்ணில் அடிக்கடி தேர்தல்களை வைத்து எமக்குள் பிளவுகளை விதைத்து வருகின்றார்கள். எம்மை ஒன்றுபட விடாமல் பலவீனப்படுத்துகின்றார்கள். இந்த விவரங்கள் எல்லாம் நமக்கு புதியன அல்ல. பலதடவை பேசப்பட்டவைதான்.

எதிரிகள் எமது தேசத்தை சிதைத்து நிரந்தரமாக அடிமைப்படுத்திட நீண்டகாலமாகவே திட்டங்கள் அமைத்து செயற்படுகின்றார்கள். நம்மிடம் இவற்றை முறையாக எதிர்கொள்ள நீண்டகால திட்டங்களையும் மூலோபாயங்களையும் நாம் கொண்டிருக்க வேண்டும். அரசியல், கல்வி, படைத்துறை, பொருளாதாரம் போன்ற அனைத்துதறைகளிலும் சேமிப்புகளை உறுதிப்படுததிக்கொண்டு தற்காப்பு மற்றும் தாக்குதலில் தொடர்ந்து ஈடுபடுவதற்காக நமது தேசம் தன்னை தயார் செய்து கொள்ள வேண்டியது உடனடி தேவையாகின்றது. அந்த வல்லமை நம் தேசத்திற்கு உண்டு.

## நம் தேசத்தின் முதற்போர்க்குரல் : சிவகுமாரன்!



அடிப்படை உரிமைகள் கோரி அகிம்சையாய திரண்டு போராடினர் ஈழத்தமிழர். அடுத்தடுத்து அரசபயங்கரவாதம் கொண்டு அடக்கிட முயன்றது சிங்கள அரசு.. மின்சாரம் கொண்டு எம்மவரை அது பொசுக்கிட்ட போது, பொங்கி எழுந்தது நம்தேசம். ஆயுதமேந்தி எதிரிக்கு பாடம்புகட்டிட வீறுகொண்டெழுந்தது நம்தேசம். இந்த எழுச்சியின் கட்டியமாய் அமைந்து, களம் புகுந்து வீரமரணமெய்திய முதல் போராளி நம் சிவகுமாரனின் நினைவுநாள் ஆனித்திங்கள் ஆறாம் நாள்.

நம் தேசத்தின் போரிடும் ஆற்றலை அரங்கிற்கு கொணர்ந்த சிவகுமாரனின் வீரமரணம், ஆயிரமாயிரம் புரட்சியாளர்களை உட்பவித்து, அன்று தொடங்கி இன்று வரை ஓயாது போராட்டத்தில் குதிக்க செய்துள்ளது..

எதிரிகளை துவம்சம் செய்ய அவன் கொண்ட ஆவேசம் அவன் இட்ட பொறி இன்று பெருந்தீயாகி எதிரிகளை பொசுக்குகின்றது. அன்று அவன் உடல் சாய்ந்தது. அவன் இட்ட உரத்தில் நம் போராட்டம் பெரு விருடசமாய் வியாபித்து செல்கிறது. அவன் சாகவில்லை இன்றும் பல்லாயிரம் மக்கள் மனங்களில் குடி கொண்டுள்ளான். புல்லாயிரம் புரட்சியாளர்களை தோற்றுவித்த அவன் இலட்சியம் நிறைவேறும். அது நிறைவேறாது நம்மூச்சும் அடங்காது. நாம் மீளவும் மீளவும் சபதம் செய்வோம் அவன் இட்ட சபதத்தை நிறைவேற்றுவோம் என.

மரிப்பது ஒரு தரம், வீரவாழ்வு வாழ்ந்து விடுதலைக்காய் போராடி மரிப்பது சாசுவதம். சிவகுமாரா ! நீ நம்தேசத்தின் சாசுவதமே !!

## அயர்லாந்து மண்ணில் உள்ள பிரிடிஷ் படைவீரனுக்கு ஓர் கடிதம்:

படைவீரனே
இங்கு வரவேண்டும் என்று
நீ யாரையும் கேட்கவில்லை
அது எங்களுக்கு தெரியும்.
நீ ஆணைகளுக்கு அடிபணிகின்றாய்
அது எங்களுக்குத் தெரியும்.
உனக்கு ஒரு மனைவி
ஓரு காதலி
ஓரு தாய் உண்டு
அது எங்களுக்கு தெரியும்.
உனக்கு குழந்தைகள் உண்டு
அதுவும் எங்களுக்கு தெரியும்.
ஆனல் படைவீரனே
எங்கு நீ நிற்கிறாயோ
அங்கே உனக்கு மரணம் நிச்சயம்.
எங்கு நீ நடக்கிறாயோ
அங்கே ஏற்படும் உனக்கொரு
எரிகின்ற காயம்.
எங்கு நீ உறங்குகிறாயோ
அங்கு உனக்கு அமைதியே
இல்லை.
ரத்தவெள்ள தீய கனவினூடே
விம்மித்தணிகிறது பூமி.

படைவீரனே
நீ மடிந்தால்
நாய்கள்தான் உன்னை புதைக்கும்.
இந்த மண்ணிற்கு நீ வந்த போது
புரிந்து கொள்ள வந்ததாக
கூறினாய் நீ.
படைவீரனே, உனது புரிதல்
எங்களுக்கு
சலிப்பூட்டியிருக்கிறது.
ஐரிஸ் மண்ணில் உள்ள
பிரிட்டிஸ் துருப்புகளும்
கதவுகளை நீங்கள் தட்டுவதும்
தலைகளில் இடிக்கும்
துப்பாக்கிக்கட்டையும்
சிறைகளும் விஷவாயுவும்
இருண்ட மூலைகளில் எங்கள் மீது
விழும் அடி உதைகளும்
எங்களுக்கு
சலிப்பூட்டியிருக்கின்றன.

படைவீரனே
ஐரிஸ் மக்களின் எலும்புகளுக்கு
நீ கொண்டு வரும் சமாதானம்
எங்களுக்கு சலிப்பூட்டியிருக்கிறது.
எங்கள் இல்லங்களில்
வெடிக்கும் குண்டுகள்
தெருக்களில் குவிந்து வரும்
இடிபாடுகள்
நெடுங்கால நண்பர்களின்
மரணங்கள்
கண்ணீர்கள், ஈமச்சடங்குகள்
முடிவேயில்லாத ஈமச்சடங்குகள்
எங்களுக்கு சலிப்பூட்டியுள்ளன.

படைவீரனே
இந்த மண்ணிற்கு நீ வந்த போது
புரிந்து கொள்ள வந்ததாக
கூறினாய்.
இதுதானா உன் புரிதல் ?
நாங்கள் இங்கு கனவு
காண்கிறோம்.
இந்த பூமி எங்கள் பூமி என
கனவு காண்கிறோம்.
கத்தோலிக்கரும்
புரொடஸ்டன்டுகளும்
கடவுள் நம்பிக்கையுள்ளவரும்
இல்லாதவரும்
ஓருநாள் இங்கு கூடி
ஐரிஸ்ஆண்களாய்
ஐரிஸ்பெண்களாய்
கனவு காண்பர்.

மரணமே இல்லாத
பசுமையானதொரு பூமியை
இறங்கிவரும் ஒரு நிசப்தத்தை
சமாதானம் என்றொரு நிசப்தத்தை
நாங்கள் கனவு காண்கின்றோம்.
இந்த கனவை நாங்கள்
காண்பதற்கு
நீ வேண்டியதில்லை.
அதுதான் எங்களது புரிதல்



காற்றை நாசப்படுத்துகிறது.
உனது புன்முறுவல்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மக்கள் அதிகாரம்

நீதியான ஒவ்வொரு போராட்டமும் மக்களின் வலுவான ஆதரவை பெற்றிருக்கும், மக்களின் நேரடி பங்குபற்றுதலை கொண்டிருக்கும், மக்களினால் முன்னெடுக்கப்படும். இது ஓர் தெளிவான வரலாற்று உண்மை. கடந்த கால போராட்டங்கள் மட்டுமன்றி, நிகழ் காலத்தில் உலகெங்கும் தமது விடுதலைக்காக போராடிக் கொண்டிருக்கின்ற நூற்றுக்கணக்கான சமூகங்களின் அனுபவங்களும் இந்த உண்மையை வலுப்படுத்திக் கொண்டிருக்கின்றன.

அரைநூற்றாண்டுக்கும் மேற்பட்ட எமது போராட்ட வரலாற்றிலும் இந்த உண்மை துல்லியமாக நிரூபிக்கப்பட்டுள்ளது. சிறீலங்கா அரசின் அடக்குமுறை மற்றும் ஆக்கிரமிப்பின் தன்மைக்கும் வடிவங்களுக்கும் ஏற்ப நமது மக்களும் தமது போராட்டத்தின் தன்மையையும் வடிவங்களையும் தீர்மானித்து வந்திருக்கிறார்கள். உண்ணாவிரதம், கடையடைப்பு, ஹர்த்தால், சத்தியாக்கிரகம்... என தொடங்கி, வன்முறை தாக்குதலாக மாற்றமடைந்து, உணர்ச்சிமிக்க வெகுஜன பங்குபற்றுதலுடன் கூடிய ஆயுதப் போராட்டமாக அது வடிவம் பெற்றது. இந்த ஒவ்வொரு போராட்ட கட்டத்திலும் நமது மக்கள் போராட்டத்தின் உறுதியான ஆதரவாளர்களாக திகழ்ந்திருக்கிறார்கள், போராட்டத்தில் நேரடியாக பங்குபற்றியிருக்கிறார்கள்.

எனினும் நாம் ஒரு கசப்பான, எதிர்மறையான அனுபவத்தின் பிரதிநிதிகளாக இருக்கிறோம். எந்த மக்களின் ஆதரவுடன், பங்குபற்றுதலுடன் நமது போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வந்திருக்கிறதோ அந்த மக்களின் தலைமை இப்போராட்டத்தில் நிலை நாட்டப்படவில்லை, அவர்களின் நலன்களும் அபிலாஷைகளும் முக்கியத்துவம் பெறவில்லை. மாறாக ஒவ்வொரு கட்டத்திலும் போராட்டத்திற்கு தலைமை வகித்த பிரிவினர் மக்களின் அர்ப்பணிப்புகளையும் உணர்ச்சிகளையும் தமது சொந்த நலன்களை அல்லது வெறும் அமைப்பு நலன்களை பேணிக் கொள்வதற்கான ஊடகமாக பயன்படுத்த முயன்றனர், பயன்படுத்திக் கொண்டனர்.

போராட்டத்தின் தலைமையாக தம்மை உயர்த்திக் கொண்ட ஒவ்வொரு பிரிவினரும் அவ்வாறு உயர முயன்ற பிரிவினரும் மக்களின் ஆதரவையும் அவர்களின் பங்குபற்றுதலையும் தமது கட்டுப்பாட்டிற்குள்ளும் ஒரு வரையறைக்குள்ளும் எல்லைப்படுத்தியே வந்துள்ளனர். தாம் விரும்புகின்ற அளவுக்கு, விரும்புகின்ற நேரத்தில் தமக்கு ஆதரவளிக்க கூடியவர்களாகவும், தம்மை தாங்கி நிற்கக் கூடியவர்களாகவும் மக்களை இவர்கள் பயன்படுத்திக் கொண்டார்களே தவிர, போராட்டத்தின் தலைமை என்ற உரிமையை மக்கள் அனுபவிப்பதற்கு அனுமதிக்கவில்லை. குறிப்பாக போராட்டம் வன்முறை வடிவத்தை பெற்ற போது, அதில் பங்கு கொண்டவர்களின் ஆயுதங்கள் மக்களின் உரிமைகளுக்கு உயிர்ப்பான பாதுகாப்பை வழங்குவதற்கு பதிலாக, அவர்களின் உரிமைகளை முன்னெப்போதையும் விட வன்மையாக மறுதலிக்கின்ற, நசுக்கி துவைக்கின்ற கருவிகளாக மாறியிருக்கின்றன.

இவற்றின் விளைவுகள் மிகவும் பாதகமானவை. போராட்டத்தில் மக்களின் தலைமை பாத்திரம் அகற்றப்பட்டது மட்டுமல்ல, அவர்கள் வெறும் பார்வையாளர்களாகவும் ஆயுதக் குழுக்களின் தேவைக்கேற்ப பயன்படுத்தப்படுகின்ற சேமிப்பகங்களாகவும் மாற்றப்பட்டிருக்கிறார்கள். போராட்டத்தின் மையப் புள்ளியிலிருந்து மக்களின் நலன்களும் அபிலாஷைகளும் அகற்றப்பட்டு விட்டன. சூக்குமமான கோஷங்களுக்காக மக்கள் தம்மை அர்ப்பணிக்கும்படி நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கிறார்கள். காலங்காலமாக தம்மீது சுமத்தப்பட்டு வந்துள்ள பிற்போக்கு அழுக்குகளையும் அடிமை தளைகளையும் அப்படியே சுமந்தபடி எதிர்கால தமிழீழத்திற்குள் நுழையுமாறு கட்டாயப்படுத்தப்பட்டிருக்கிறார்கள்.

இவ்வாறு தமது குறிப்பான நலன்கள், அபிலாஷைகள் என்பவை மறுக்கப்பட்டிருக்கின்ற நிலையில், நமது மக்கள், போரட்டத்தில் இருந்து விலகி செல்லும் போக்கு படிப்படியே நிகழ்ந்து வருகின்றது. போராட்டத்தை அந்நியமாக கருதுகின்ற மனநிலை, எவ்வழியிலாவது போராட்டம் முடிந்து விட்டால் போதும் என்ற சலிப்பு நமது மக்கள் மத்தியில் மௌனமாக திரண்டு வருகின்றது. சந்திரிகாவின் மீதோ, சர்வதேச தலையீடுகள் குறித்தோ நம்மக்கள் காட்டிய, காட்டுகின்ற கூட்டு ஆர்வத்திற்கு வேறு என்ன காரணத்தை நாம் கூறப் போகின்றோம்?

இப்போக்கு நீடிக்குமாயின், போராட்டத்திலிருந்து மக்கள் முற்றாக அந்நியப்படுகின்ற சூழல் தவிர்க்க முடியாது உருவாகி விடும். இது சிறீலங்கா அரசின் ஆதிக்கத்தின் கீழ் தமிழ் தேசம் தொடர்ந்தும் அடிமைப்பட்டிருப்பதை உறுதியாக்கி விடும். இவ்வாறு நிகழ்வதைத் தான் சிறீலங்கா அரசு விரும்புகின்றது, எதிர்பார்க்கின்றது. போராட்டம் இதேவடிவில் நீடிக்குமாயின் தமிழ் மக்கள் போராட்டத்திலிருந்து மேலும் அந்நியமாக்கப்படுவார்கள் என்ற உண்மையை சிறீலங்கா அரசும் படைத் தலைமையும் உணர்ந்திருக்கின்றன. ஏனவே அப்படிப்பட்ட சூழலை உருவாக்கிட இவர்கள் கடுமையாக முயற்சிக்கின்றனர். இந்த வகையில் மக்கள் அந்நியப்பட்ட நிலையில் போராட்டம் நீடித்து செல்வதானது, எம்மீதான அடிமைத் தளை மேலும் வன்மையாக இறுக்கப்படுவதற்கு காரணமாகின்றது என்ற அபாய உண்மையை நாம் உணர்ந்து கொள்வோம்.

இந்நிலையை எமது தேசம் எப்படி மாற்றியமைக்க முடியும்? சிறீலங்கா அரசின் நிரந்தர அடிமையாக்கப்படுவதிலிருந்து எவ்விதம் தவிர்ந்து கொள்ள முடியும்? போராட்டத்தின் தலைமை மக்களிடம் சென்றடைவதுதான் இதற்கான ஒரே, தர்க்கரீதியான வழி. மக்கள் தாமே போராட்ட தலைமையாக மாறுவதும் தமக்குரிய விதத்தில் போராட்டத்தை முன்னெடுக்கின்ற அதிகாரத்தை பெறுவதும்தான் இன்றைய எதிர் மறையான நிலையை மாற்றியமைப்பதற்கான ஒரே மார்க்கம்.

இத்தகைய நிலை தோன்றும் போதுதான் எமது போராட்டமானது, மக்கள் தமது குறிப்பான நலன்கள், கோரிக்கைகள் என்பவற்றை தெளிவாக முன்வைத்து, அவற்றை அடைவதற்கான வழிமுறைகளை காணுகின்ற உண்மையான வெகுஜன போராட்டம், மக்கள் யுத்தம் என்ற பண்பை பெறும், அப்போதுதான் 50களிலும் 80களிலும் எமது மக்களிடையே திரண்டெழுந்த உணர்ச்சிகளுடன் கூடிய பங்குபற்றுதலை எமது போராட்டம் மீண்டும் அனுபவிக்கும், அப்போது தான் தமிழீழம் என்ற அரசியல் கருவை நமது மக்கள் தமது சொந்த குழந்தையாக கருதுகின்ற நிலை உருவாகும், இக்கரு முழு வடிவம் பெற்று பிறப்பதற்கு தடையாக, சிறீலங்கா அரசு எவ்வாறு செயற்படுகின்றது என்பதை நமது மக்கள் பிரக்ஞை பூர்வமாக புரிந்து கொள்ளவும் நமது மண்ணிலிருந்து சிறீலங்கா அரசின் கடைசி சுவடும் அகலும்வரை அவர்கள் தீரமுடன் போராடவும் கூடிய நிலை உருவாகும்.

எனினும் இத்தகைய போராட்ட சூழல் தானாகவே உருவாகாது. மக்களின் அதிகாரம் என்பது ஒருபோதும் அனுமதிக்கப்பட்டிராத சமூக, அரசியல் பாரம்பரியம் நிலவி வந்திருக்கின்ற சூழலில், மக்களின் நலன்களும் கோரிக்கைகளும் மிக எளிதாக உதாசீனப்படுத்தப்பட்டு வந்திருக்கினற அரசியல் கலாச்சாரம் நிலவுகின்ற சூழலில், மக்களின் கருத்துக்கள் கவனத்தில் கொள்ளப்படாமலும் அவர்கள் மீது கடுமையான அடக்குமுறைகள் பிரயோகிக்கப்பட்டும் வந்திருக்கின்ற பிற்போக்கு மரபில் மக்களின் தலைமையும் அதிகாரமும் நிலைபெறுவது அவ்வளவு எளிதான விடயமல்ல. பிரக்ஞைபூர்வமானதும் உறுதியானதும் தொடர்ச்சியானதுமான நலன்களினதும் அபிலாஷைகளினதும் திரட்சியாக அமைகின்ற புரட்சிகர கட்சியினூடாகவே இதை நிலைநாட்ட முடியும். [illegible]

## மறைக்கப்பட்ட ...

(முதலாம் பக்க தொடர்ச்சி)

ஆகவே இங்குள்ள பிரச்சினை யுத்தம் என்பதல்ல, மாறாக சிறீலங்கா அரசு மேற்கு நாடுகளுக்கு சாதகமாக செயற்படுகின்றது என்பதுதான். தமிழ்மக்கள் மீதான சிறீலங்கா அரசின் இனஅழிப்பு நடவடிக்கைகள் எண்ணிக்கை ரீதியாக வெளிப்படுமாயின், அதன்மூலம் சிறீலங்கா அரசின் மீது அழுத்தங்களை பிரயோகிக்க வேண்டும் என்ற கோரிக்கைகள் சர்வதேச சமூகங்கள் மத்தியில் வெளிப்பட கூடிய நிலை உருவாகும். ஏனெனில் இனஅழிப்பு என்பது சர்வதேச அழுத்தத்தை குவிக்கின்ற உணர்வு மையமாக இன்று இருக்கின்றது. இதனால் சிறீலங்கா அரசை ஆதரிக்கின்ற மேற்கு நாடுகள் ஒரு இக்கட்டான நிலைக்கு தள்ளப்படும். எனவே, எமது மக்கள் மீதான சிறீலங்கா அரசின் இனஅழிப்புகள் குறித்து அக்கறையற்று நடந்து கொள்ள வேண்டிய தேவையும் தகவல்களை மறைக்க வேண்டிய தேவையும் இந்த அமைப்புகளுக்கு உண்டு என்பதை நாம் குறித்து கொள்வோம்.

இவ்வாறான நிலையில், காணாமல் போயுள்ள எமது மக்களின் நிலையை அறிந்து கொள்வதற்கான வழிமுறைகளை நாமே உருவாக்க வேண்டும். குறிப்பாக இவ்வாறான ஜுவாரங்களில்ஜி வெகுசன எழுச்சிகள் மூலம், கைது செய்யப்பட்ட எமது மக்களின் நிலை குறித்த தகவல்களை தெரிவிக்க வேண்டிய நிர்ப்பந்தத்தை சிறீலங்கா அரசுக்கும் இத்தகைய அமைப்புகளுக்கும் ஏற்படுத்த வேண்டும். [illegible]

## தேர்தல்கள்...

(முதலாம் பக்க தொடர்ச்சி)

எடுத்துக்கொள்ளவும் வேண்டும். போராடும் தரப்புகள் பரஸ்பரம் தமக்குள் கைகோர்த்துக் கொள்ள வேண்டும். எம்மையே பலிகொள்ளும் இத்தேர்தல்கள் அவ்வப்போது வந்து போகும், புரட்சியாளர்கள் தமது இலக்குகளை தவறவிட்டு விடக்கூடாது. புரட்சிக்கான தேவை உள்ளது. அதற்கு மக்கள், உண்மையான தமது பலத்தை உணர வேண்டும். அப்போது தேர்தல்கள் மாயைகள் அகன்று மக்கள் புரட்சிப்பாதையில் மேலும் உறுதியாக தமது காலடிகளை பதிப்பர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அதிகரித்துவரும் பெண் குடும்பப் போஷகர்கள்

நமது தேசத்தில் கணவர்களை இழந்த பெண்களின் எண்ணிக்கை என்றுமில்லாவாறு அதிகரித்துள்ளது. சிறீலங்கா அரசு எம்மீது தொடுத்துள்ள இனஅழிப்பு யுத்தத்தின் துயர்நிறைந்த விளைவுகளில் இதுவுமொன்று. ஆயிரக்கணக்கான பெண்கள், “விதவைகள்” என்ற அடைமொழியுடன் அல்லல்பட்டு கொண்டிருக்கின்ற நிலை நாள்தோறும் அதிகரிக்கின்றது. எமது தேசத்தின் ஒரு கூறாக உருவாகியுள்ள இப்பெண்கள் குறித்து, இவர்களின் சமூக அந்தஸ்த்து குறித்து புதிய மரபொன்று எம்மத்தியில் நிலைபெறுவது அவசியம்.

எமது சமூகத்தில் விதவை எனும் சொல், வெறுமனே ஒரு குறியீட்டுப் பெயராக மாத்திரம் இல்லை. விதவை என்பவள் சமூக வாழ்வுக்குத் தகுதியற்றவள் எனும் பால் நிலைக் கருத்தாக்கத்தையும் சுமந்ததாயுள்ளது. “ஆணுக்காகவே பெண் வாழ்கிறாள்” எனும் சமூக வலியுறுத்தல்களுக்கமைய கணவன் இறந்ததும் பெண்ணின் வாழ்வு அர்த்தமற்றுப் போகிறது, அந்த ஜீவன் இனி மரணத்தை எதிர்கொள்வதற்கு மாத்திரமானதே என்பதையும் பெண்ணுக்கு உணர்த்துவதாயுள்ளது.

ஆணாதிக்க சமூக அமைப்பில், மானுடத் தேவைகள் அனைத்தும் ஆணை மையப்படுத்தியே தீர்மானிக்கப்படுகின்றன. பெண் என்பவள் ஆணுக்கான தேவைகளை - பாலியல், குழந்தையுற்பத்தி, உணவு வழங்கல், பராமரிப்பு - நிறைவேற்றப் பிறந்தவள், எனவே ஆண் இறந்ததும் பெண்ணின் வாழ்வும் அத்துடன் முடிந்துவிடுகிறது என்பது ஒரு சமூக வழக்காக நிறுவப்பட்டுள்ளது. இச்சிந்தனையை இறுக்கமான ஒருதார மணமுறையினதும் நிலவுடமைக் கால ஆணாதிக்கக் கூறுகளினதும் ஒரு கலவையாகவே நாம் காண்கிறோம்.

மேலும், விதவை எனும் சொல்லுக்கு பொருளாதாரம் சார்ந்த அர்த்தமும் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளது: எமது சமூகத்தில், ஒரு குடும்பத்தின் பொருளாதார தேவைகளை நிறைவேற்றுகின்ற போஷகனாக ஆணே கணிக்கப்படுகிறான். பெண் தனது பொருளாதாரத் தேவைகளுக்காக ஆணைச் சார்ந்திருக்க வேண்டிய நிலையில் இருக்கிறாள். இந்நிலையில், ஆண் இறந்ததும், பெண்ணும் குழந்தைகளும் பொருளாதார ரீதியாக அனாதரவாகின்றனர். எனவே விதவை எனும் சொல் பொருளாதார ரீதியில் பலவீனமான நிலையிலிருப்பவள்: தனது போஷகரை இழந்துவிட்டவள் என்பதையும் உள்ளடக்கியதாயுள்ளது.

சமூக உழைப்பை ஆணுக்கானதாக உறுதிப்படுத்தியது: அதன் மூலம் ஆணை குடும்பப் போஷகராக குடும்பத் தலைவனாக அடையாளப்படுத்தியது: அதை அரச சட்டத்தின் மூலம் உறுதிப்படுத்தும் நிலைக்குக் கொண்டு வந்தது யாவும் ஐரோப்பாவில் கைத்தொழில் புரட்சியுடன் புதியவடிவம் பெற்ற ஆணாதிக்க முறைமையாகும். இதனுடன் நாம் மேலே பார்த்த பாரம்பரிய கருத்தாக்கங்களும் இணைந்து விதவை எனும் நிலைக்கு கூடுதல் அடக்குமுறை வடிவங்களை சுமத்தியுள்ளன.

பெண்ணை ஒரு மானுடப் பிறவியாகவே ஏற்க மறுக்கும் ஆணாதிக்க சமூக அமைப்பால் உருவாக்கப்பட்ட இத்தகைய சொற்பிரயோகங்களை தொடர்ந்தும் நாம் உபயோகிக்க வேண்டுமா? அதன் மூலம் நமது சமூகப் பெண்களைத் தொடர்ந்தும் பிற்போக்கான வாழக்கை முறைக்குள் கட்டிப்போட வேண்டுமா?



பெண் என்பவள் சுதந்திரமான உணர்ச்சிகளும் பிரக்ஞையுமுள்ள ஒரு சமூக ஜீவி என்ற அடிப்படையில் அவளின் வாழ்வு சுயாதீனமானதாகும். பெண்ணும் ஆணும் இணைந்து வாழ்கின்ற வாழ்கையில் இருவரில் ஒருவர் இறப்பது இயற்கையே. இந்நிலையில், தனது துணையை இழந்த பெண்ணின் மீது மாத்திரம் ஏன் சமூகத்தால் அடையாளப் பெயர்களும் கட்டுப்பாடுகளும் சுமத்தப்பட வேண்டும்? எதற்காக ஆணின் வாழ்வுடன் பெண்ணைத் தொடர்புபடுத்த வேண்டும்?

விதவை எனும் சொல் பெண்ணின் சுயாதீனத்தை, ஆளுமையை, சுயத்தை நிராகரிக்கும் அடையாளப் பெயராகும். ஆணின்றி பெண்ணுக்கு வாழ்வில்லை எனும் ஆணாதிக்க பிற்போக்கு சரித்தாநங்தங்களால் கட்டமைக்கப்பட்டிருக்கும் விதவை எனும் சொல்லை நமது உரையாடலிலிருந்து நீக்குவோம்.

இன்று, நமது தேசத்தை ஆக்கிரமித்திருக்கும் சிறிலங்காப் படைகளால் குறிப்பாக ஆண்கள் படுகொலை செய்யப்படுவதும், கைது செய்யப்படுவதும், காணாமற் போவதும் நாளாந்த நிகழ்வாகியுள்ளன. இந்நிலையில் குடும்பத்தின் போஷகர்களாக, குடும்பத்தின் தாங்கு சக்திகளாக பெண்கள் வெளிப்படையாகவே செயற்பட வேண்டிய நிலையேற்பட்டுள்ளது. ஆணாதிக்க முறைமையின் அழுத்தங்களை கடந்து, இப்பெண்கள் தம்முடையதும் தம்மை சார்ந்துள்ளவர்களினதும் தேவைகளை நிறைவேற்றும் போஷகர்களாக மாறியுள்ளார்கள். இச்சூழலில் அவர்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொள்கிறார்கள்.

### பொருளாதாரப்பிரச்சினை:

பாரம்பரியமாக பெண்கள் ஈடுபட்டுவந்த உற்பத்தி நடவடிக்கைகள் சிறிலங்கா ஆக்கிரமிப்பினால் இன்று அதிகளவில் சிதைவுற்றுப் போயுள்ளன: உதாரணமாக, தோட்டச் செய்கை, நெற்செய்கை, விவசாயக் கூலிவேலை, விவசாய உற்பத்திப் பொருள் வியாபாரம், சிறுவர்த்தகம், கடல் பொருள் சிறுவியாபாரம், கடல்பொருள் பதனிடுதல், கால்நடை வளர்ப்பு, பால்பொருள் உற்பத்தி, ஏனைய கூலி வேலைகள், குடிசைக் கைத்தொழில்கள். .. இன்னும் பிற.

மூளையுழைப்பில் ஈடுபடக்கூடிய பெண்கள் தமக்கேற்ற வேலைகளை பெற முடியாத சூழ்நிலை, சம்பளப் பணத்தை ஒழுங்காகப் பெற்றுக்கொள்ள முடியாத நிர்வாகச் சீர்கேடு, பேரினவாத அரச கொள்கை காரணமாக தமிழ்ப் பெண்களுக்கு அரச தொழில்கள் இலகுவில் கிடைக்காதது, தமிழீழத்தில் பெண்களின் மூளையுழைப்பை உள்வாங்கக் கூடிய நிறுவனங்கள் இல்லாமை . . . . .

இவ்வாறு நமது பெண்கள் வருவாய் ஈட்டும் மூலங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. வருவாயற்ற நிலையில் சிறிலங்கா அரசால் விதிக்கப்பட்டிருக்கின்ற பொருளாதாரத்தடை, அத்தியாவசியப் பொருட்கள் கறுப்புச் சந்தையில் விற்கப்படுதல்...போன்ற யாவும் பெண்களையே முதலில் பாதிக்கின்றன.

தாம் பாரம்பரியமாக ஈடுபட்டுவந்த உற்பத்திமூலங்கள் சிதைவுற்ற நிலையில் கணவன் இல்லாத இப்பெண்கள் பொருளாதாரத்தில் மிகவும் கீழான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். அநேகமான குடும்பத்துப் பெண்கள், எதிரி அரசின் நிவாரணத்தை நம்பி வாழ வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது. கணவன் இல்லை என்ற காரணத்தால், உறவினர்கள் அயலவர்கள இப்பெண்களுக்குக் கடன் கொடுப்பதற்கும் தயங்குகின்றனர்.

இவ்வாறு யுத்தத்தால் சிதைக்கப்பட்டிருக்கும் பொருளாதாரக் கட்டமைப்பிற்குள் தமதும் தம்மைச் சார்ந்த குடும்பத்தவரதும் - பிள்ளைகள், முதியவர்கள் - உயிர்வாழ்தலுக்காக, கணவர்கள் இல்லாத நமது பெண்கள் கடுமையாக போராடிக் கொண்டிருக்கின்றனர்.

### சமூகப் பிரச்சினைகள்:

பெண்ணுக்கு கணவன் இல்லையெனும் காரணத்தினால் அயலவ ஆண்களால் பாலியல் தொல்லைகள், இம்சைகள் இழைக்கப்படுவது சகஜமாகி வருகிறது. கணவன் இல்லாத பெண்கள் எனத் தெரிந்ததும் சிறீலங்கா படைகள், அவர்களை பாலியல் துன்புறுத்தல் மற்றும் வன்புணர்ச்சிக்குள்ளாக்குவதில் தீவிரமாக ஈடுபடுகின்றது.

குடும்பப் பொருளாதாரம் மற்றும் பிள்ளைகளின் எதிர்காலம் பற்றிய கவலைகள், தனித்து வாழ்வதால் ஏற்படும் அச்சவுணர்வு, வறுமை, யுத்த சூழல் யாவும் இப்பெண்களை உளக் கேடுடையவர்களாக்குகினறன.

தமதும் குடும்பத்தவரதும் பொருளாதாரத் தேவைகள் காரணமாக இத்தகைய பெண்களில் சிலர் தமது உடல்களை விற்கும் அவல நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். கணவனையிழந்த பெண்ணை திருமணம் செய்வதில் ஆண்கள் தயக்கம் காட்டுவதாலும் துணையை இழந்த பெண்கள் வேறு துணையைத் தேடிக் கொள்வதில் சமூகம் கொண்டுள்ள பிழையான தூய்மைவாத சிந்தனைகள் [illegible] நீடிக்கின்றது.

(பார்க்க 6ஆம் பக்கம்)

| கணவனை இழந்த பெண்களின் (பெண் போஷகர்கள்) எண்ணிக்கை |
| --- |
| வட தமிழீழம் - 19, 190 |
| தென்தமிழீழம்: |
| திருகோணமலை - 5000 |
| மட்டக்களப்பு - 8000 |
| பட்டிப்பளை(அம்பாறை) - 1700 |
| (இது அரச சார்பற்ற நிறுவனமொன்றின் பருமட்டான கணக்கெடுப் பாகும். இக்கணக்கெடுப்பில் அடங்காத பெண்போஷகள் இன்னும் எத்தனை ஆயிரம்பேர் தேசத்திலுள்ளனரோ?) |



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# முஸ்லிம் தேசம்

தமிழீழத்தை தமது தாயகமாக கொண்டிருக்கின்ற முஸ்லிம்மக்கள், ஒரு தனியான தேசம். தேசம் என்பது, அரசியல் இலக்கு சார்ந்த மக்கள் திரட்சியை குறிக்கின்றது. குறிப்பிட்டதொரு மக்கள் திரள் தம்மை இணைக்கின்ற பொது அடையாளம் அல்லது அடையாளங்களின் கீழ் திரண்டு, தாம் ஒரே அரசியல் தலைவிதியினால் பிணைக்கப்பட்ட சமூகம் என்பதை வெளிப்படுத்தி, தமக்கென தனியான அரசியல் அதிகாரங்களை கோருகின்ற போது, அவர்கள் ஒரு தேசமாக பரிணமிக்கிறார்கள். உணர்ச்சியும் கொந்தளிப்பும் நிறைந்த இந்நிகழ்வுப் போக்கின் போது, அவர்கள் மத்தியில் நிலவுகின்ற வேறுபாடுகள் ஒதுக்கப்பட்டு, அவர்கள் அனைவருக்கும் பொதுவான அம்சங்கள் முக்கியப்படுத்தப்படுகின்றன. ஏனைய தேசங்கள் மற்றும் சமூகங்களிலிருந்து அவர்களை வேறுபடுத்துகின்ற தனித்துவமான கூறுகள் தீர்க்கமானவையாகின்றன.

தமிழீழத்தில் வாழ்கின்ற முஸ்லிம் மக்கள் மத்தியிலும்,இத்தகைய தேச உருவாக்கம் 1980களில் தீவிரமடைந்தது. எமது காலத்தில், எமது கண்ணெதிரே இவ்வுருமாற்றத்தை நாம் கண்டோம். தமிழீழத்தின் வெவ்வேறு பிரதேசங்களில், நேரடி தொடர்பின்றி, தனித்தனியாக வாழ்ந்தும் கூட, ஒரே அரசியல் தலைவிதியினால் பிணைக்கப்பட்ட மக்கள் பிரிவினராக தம்மை இனங்கண்டனர். தேசமாகத் திரண்டார்கள். தமக்கென தனியான அரசியல் அதிகாரம் வேண்டும் என்பதை உறுதியாக வெளிப்படுத்தி, தனியான அரசியல் இயக்கத்தையும் உருவாக்கினார்கள். இவ்வாறு, தமிழீழத்தில் வாழ்கின்ற முஸ்லிம்மக்கள் ஒரு தனியான தேசமாக உருவாகியுள்ளார்கள் என்பதே, தமிழீழ மக்கள் கட்சியின் அரசியல் நிலைப்பாடாகும்..

ஒரு மக்கள் சமூகம், எப்போது தன்னை ஒரு தேசமாக அரசியல் திரட்சிக்குட்படுத்துகின்றதோ, அப்போதிருந்தே ஒரு தேசத்திற்குரிய, அனைத்து உரிமைகளும் அதனுடன் பிணைந்து விடுகின்றன. தனது சமூக, பொருளாதார, கலாச்சார வாழ்வை தனக்குரிய விதத்தில் தீர்மானிப்பதற்கான உரிமை, தனக்குரிய வாழிடத்தின் மீது பூரண இறைமை, தனக்கேற்ற விதத்தில் உள்ளக கட்டுமானங்களை ஏற்படுத்தும் உரிமை... என்பவற்றோடு, எல்லாவற்றுக்கும் மேலாக தனது அரசியல் வாழ்வை தானே தீர்மானிப்பதற்கான சுயநிர்ணய உரிமை என்பவை அத்தேசத்துடன் ஒன்று கலந்து விடுகின்றன. இதன்பின்னர் அத்தேசத்தின் உரிமைகளை மறுக்கின்ற அல்லது அத்தேசம் தனது உரிமைகளை அனுபவிப்பதற்கு தடையாக அமைகின்ற எத்தகைய முயற்சியும் தேசிய அடக்குமுறை என்ற அரசியல் அர்த்தத்தை பெறுகின்றது.

ஈழத்தமிழர்களாகிய நாமும் நமது அரசியல் தலைமைகளும், முஸ்லிம் மக்கள் மத்தியில் நிகழ்ந்து கொண்டிருந்த அரசியல் திரட்சியை- தேச உருவாக்கத்தை- புரிந்து கொள்ளத் தவறி விட்டோம், அவர்களை தனியான தேசமாக அடையாளம் காண மறுத்து விட்டோம். மாறாக, மதரீதியாக மட்டும் வேறுபட்ட சமூக பிரிவாக அவர்களைக் கருதி, தமிழ்தேசத்தின் எல்லைக்குள் அவர்களை இருத்தி வைப்பதற்கு நமது அரசியல் தலைமைகள் கடும் பிரயத்தனப்பட்டன, பிரயத்தனப்படுகின்றன.

இத்தகைய முயற்சிகளை முஸ்லிம் மக்கள் நிராகரித்து, தமது அரசியல் தனித்துவத்தை உறுதியாக முன்வைத்த போது, நாம் அவர்களை வெறுப்புடன் நோக்கினோம். தமிழ்தேசத்தின் ஒரு கூறாக முஸ்லீம்களையும் இணைத்து கொள்ள விரும்புகிறோம் என்ற எமது கூற்றுக்கு முற்றிலும் முரணான விதத்தில், அவர்கள் மீதான கடும் பகைமை எம்மத்தியில் உருவானது. ஈற்றில், எமது அரசியல் இயக்கங்கள் குறிப்பாக ஆயுதப்போராட்ட இயக்கங்கள்- முஸ்லீம் மக்கள் மீது வன்முறை தாக்குதல்களை மேற்கொண்டன, இதன் உச்சக் கட்டமமாக முஸ்லீம் மக்கள் தமது பாரம்பரிய வாழிடத்திலிருந்து வெளியேற்றப்பட்ட பாரிய அரசியல் தவறு இழைக்கப்பட்டது.

இத்தகைய நிகழ்வுகள், சர்வதேச சமூகங்கள் மத்தியில் எமது போராட்டத்தின் அரசியல் பண்பை கேள்விக்குள்ளாக்கி இருக்கின்றன. சிறீலங்கா அரசின் ஆக்கிரமிப்புக்கெதிரான நீண்ட, வீரமிக்க போராட்டத்தின் மூலம், சர்வதேச சமூகங்களின் அக்கறையையும் அனுதாபத்தையும் எம்பக்கம் திருப்பியிருக்கின்ற நாம், முஸ்லிம் தேசம் தொடர்பான எமது அடக்குமுறை கொண்ட அணுகுமுறைகளின் காரணமாக, இவற்றை கணிசமாக இழந்து விட்டோம். சிறீலங்கா அரசின் அடக்குமுறைக்கெதிராக போராடுபவர்கள் என்ற புரட்சிகர மாண்பை, முஸ்லிம் மக்களை அடக்குபவர்கள் என்ற அவப்பெயர் மூலம் இழந்து விட்டோம். எமது தேச உரிமைக்காக போராடுகின்ற நாம், இன்னொரு தேசத்தின் உரிமைகளை மறுக்கின்றவர்களாக அடையாளப்படுத்தப்பட்டிருக்கிறோம்.

இத்தகைய நிலைமை, எமது போராட்டத்தின் வெற்றிக்கு ஒருபோதும் உதவமாட்டாது. இன்னொரு தேசத்தின் உரிமைகளை மறுத்து கொண்டு, அத்தேசத்தின் மீது அடக்குமுறைகளை பிரயோகித்து கொண்டு, எமது விடுதலையை நாம் பெற்றுவிட முடியாது. தேசிய அளவில் மட்டுமன்றி, சர்வதேச அளவிலும் எமது போராட்டம் இன்று அடைந்துள்ள தேக்க நிலைக்கும் எதிர்கொள்கின்ற நெருக்கடிகளுக்குமான காரணிகளில், முஸ்லிம் தேசத்தின் மீதான இத்தகைய அடக்குமுறைகளும் ஒன்று என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

இன்னொரு தேசத்தின் உரிமைகளை மறுத்து கொண்டு, அத்தேசத்தின் மீது அடக்குமுறைகளை பிரயோகித்து கொண்டு, எமது விடுதலையை நாம் பெற்றுவிட முடியாது. தேசிய அளவில் மட்டுமன்றி, சர்வதேச அளவிலும் எமது போராட்டம் இன்று அடைந்துள்ள தேக்க நிலைக்கும் எதிர்கொள்கின்ற நெருக்கடிகளுக்குமான காரணிகளில், முஸ்லிம் தேசத்தின் மீதான இத்தகைய அடக்குமுறைகளும் ஒன்று என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

ஒரு தேசத்தின் உரிமைகளுக்கு எதிராக எத்தகைய தர்க்க நியாயத்தையும் யாரும் முன்வைக்க முடியாது. எமது பூர்வீகத்தை கொச்சைப்படுத்தியோ, எமது மண்ணை ஆக்கிரமித்தோ, இன்னும் ஏராளமான வழிகள் மூலமோ எமக்குரிய தேச உரிமைகளை மறுப்பதற்கு, சிறீலங்கா அரசுக்கு எந்த அரசியல் நியாயமும் கிடையாது என்பதை எவ்வளவு உறுதியாக வெளிப்படுத்தி வந்திருக்கின்றோமோ, அதேபோன்று முஸ்லிம் தேசத்தின் உரிமைகளை மறுப்பதற்கும் எமக்கு எந்த அரசியல் நியாயமும் கிடையாது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

ஒரே மொழியை பேசுகிறோம் என்பதோ, ஒருவரோடு ஒருவர் கலந்து வாழ்கிறோம் என்பதோ முஸ்லிம்களின் தேசிய உரிமைகளை மறுப்பதற்கான காரணங்களாக மாட்டாது. இந்த ஒற்றுமைகளையெல்லாம் மீறி, ஒரு தனியான தேசமாக முஸ்லிம்கள் தம்மை அடையாளப்படுத்தியுள்ளார்கள் என்பதுதான் இங்குள்ள அரசியல் குறிபொருள். இதை உணர்ந்து கொள்ள மறுத்து, முஸ்லிம்கள் தமது தேச உரிமைகளை அனுபவிப்பதை தடுக்கின்ற எந்த முயற்சியும் சாராம்சத்தில் தேசிய அடக்குமுறையாக, ஆக்கிரமிப்பின் ஒரு வடிவமாகவே கருதப்படவேண்டும்.

இங்கு இன்னொரு உண்மையிலும் நாம் கவனத்தை குவிப்போம். எமது தேச உருவாக்கமானது, முற்றிலும் சிறீலங்கா அரசின் அடக்குமுறைக்கும் ஆக்கிரமிப்புக்கும் எதிரான எமது அரசியல் திரட்சியின் விளைவுவாகும். ஆனால் முஸ்லிம்மக்களின் தேசஉருவாக்கமானது, ஆரம்பத்தில் சிறீலங்கா அரசின் ஆதிக்கத்திற்கு எதிரானதாக தோற்றம்பெற்ற போதிலும், ஒப்பீட்டளவில் அதன் இன்றைய வடிவமானது, தமிழ் தரப்பு அடக்குமுறைகளுக்கு எதிரான முஸ்லிம்மக்களின் உணர்வெழுச்சியின் விளைவு என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். சிறீலங்கா அரசின் அடக்குமுறையும் ஆக்கிரமிப்பும் தொடரும் வரை, சிங்கள-தமிழ் தேசங்களுக்கிடையிலான அரசியல் ஐக்கியம் சாத்தியமற்றது என்பது எவ்வளவு உண்மையோ, அதே அளவுக்கு முஸ்லிம் தேசத்தின் மீதான எமது தரப்பு அடக்குமுறையும் ஆக்கிரமிப்பு மனோபாவமும் மாறாத வரை, தமிழ்-முஸ்லிம் தேசங்களுக்கிடையிலான அரசியல் ஐக்கியமும் சாத்தியமற்றது.

இதற்கு மேல், தமிழ்-முஸ்லிம் மக்களுக்கிடையே மீண்டும் ஐக்கியத்தை கட்டியெழுப்ப வேண்டும் என்ற நன்நோக்கில், சமூக, பொருளாதார, கலாச்சார காரணிகளின் அடிப்படையிலோ, வரலாற்று ஆதாரங்களின் அடிப்படையிலோ நாம் முன்வைக்க கூடிய எத்தகைய வாதங்களும் முயற்சிகளும் இவர்களிடையே ஐக்கியத்தை உருவாக்கி விடாது. இன்றுவரை, இவ்வாறு மேற்கொள்ளப்பட்ட அனைத்து முயற்சிகளும் தோல்வியில் முடிந்திருப்பது இதை நிரூபிக்க போதுமானது. இது தற்செயலானது அல்ல. மாறாக, இத்தகைய தோல்வி தவிர்க்க முடியாதது. ஏனெனில் [illegible] ரீதியானது. அரசியல் ரீதியான



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தமிழீழ விடுதலையும் சர்வதேசத் தலையீடும்!

அண்மைக் காலங்களில் உலகில் இடம் பெற்றுள்ள சில நிகழ்வுகள் எமது மக்கள் மத்தியில் கணிசமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன: பொஸ்னிய விடுதலை, அயர்லாந்து ஒப்பந்தம், செச்னிய மக்களின் போராட்டம், பலஸ்தீன ஒப்பந்தம், ஸ்கொட்லாந்துக்கு வழங்கப்பட்டுள்ள தனிப்பாராளுமன்ற முறைமை, கிழக்கு தீமோர் மக்களின் சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட்டுள்ளமை....என்பவற்றோடு இன்று தீவிரமாகியுள்ள கொசோவா நிலைமை போன்றவை எமது மக்கள் மத்தியில் தமது போராட்டம் குறித்து நம்பிக்கையான உணர்வலைகளை தூண்டியுள்ளன. இது ஒரு நல்ல அறிகுறி. ஏனெனில் ஒரு போராட்டம் வெற்றி பெறுவதில் அப்போராட்டத்தின் மீது மக்கள் கொண்டிருக்கின்ற அசைக்க முடியாத நம்பிக்கை முக்கியமானது.

எனினும் இன்று எமது அரசியல் அரங்கில் -குறிப்பாக "புத்திஜீவிகள்" மற்றும் அரசியல் ஈடுபாடு கொண்டவர்கள் மத்தியில்- நமது போராட்டத்தை மேலும் உறுதியாகவும் வலுவாகவும் முன்னெடுத்து செல்வதற்கு பதிலாக, அந்நியத் தலையீட்டின் மூலம் ஒரு தீர்வை பெற்றுக் கொள்ளும் முனைப்பு அதிகரித்துள்ளது. உண்மையில் எமது போராட்டத்தில் அந்நிய தலையீடு அவசியம் என்ற கோஷம் நீண்ட காலமாகவே முன்வைக்கப்பட்டு வந்தி-ருக்கின்றது. இப்போது குறிப்பாக கொசோவா விவகாரத்தின் தாக்கத்தினால் சர்வதேச தலையீடு அவசியம் என்ற கோஷம் மேலும் வலுப்பெற்று வருகின்றது.

எனினும் எமக்கு அவதானம் தேவை. எமது தேசத்தின் அரசியல் தலைவிதியுடன் நேரடித் தாக்கம் விளைவிக்க கூடிய விடயம் தொடர்பாக நாம் ஆழமானதும் தெளிவானதுமான புரிதலை கொண்டிருக்க வேண்டும். அந்நிய தலையீட்டின் கொடிய விளைவுகளை நாம் அனுபவித்திருக்கி-றோம். குறுகிய இரண்டு வருட காலத்திற்குள், இந்திய படைகளின் அட்டூழியங்களை மட்டுமல்ல, இந்திய அரசின் தலையீட்டினால் எமக்கு ஏற்படுத்தப்பட்ட அரசியல் ரீதியான பாதகங்களையும் நாம் அனுபவித்திருக்கிறோம். இதன் வடுக்கள், தடயங்கள் இன்னமும் எமது தேசத்தின் மத்தியில் அழியாது நிலவுகின்றன. எனவே மீண்டும் ஒருமுறை சர்வதேச தலையீடு பற்றி பேசும் போது நாம் விழிப்பாக இருப்போம். எமக்கு ஏற்படுத்தப்பட்ட கோர அனுபவங்களை தொடக்க புள்ளியாக கொள்வோம்.

கோசோவா மக்கள் மீது சேர்பிய படைகள் மேற்கொண்டுள்ள ஈவிரக்கமற்ற அடக்குமுறைகளையும் அட்டூழியங்களையும் ஒரு தேசம் என்ற வகையில் நாம் உறுதியாக எதிர்ப்போம். கோசோவா மக்களின் சுயநிர்ணய உரிமையை மறுத்து அவர்களை ஆயிரக்கணக்கில் கொன்று குவித்தும் லட்சக்கணக்கில் வெளியேற்றியும் வருகின்ற சேர்பிய படைகளுக்கு எதிராக சர்வதேச சமூகங்களுடன் நாமும் கைகோர்ப்போம். எனினும் இந்த நிலைப்பாடு, சேர்பியாவின் மீது உக்கிரமான யுத்தத்தை நடத்தி வருகின்ற நேட்டோவின் செயற்பாடுகளை அங்கீகரிக்கின்ற நிலைக்கு எம்மை இட்டு செல்ல கூடாது. நூற்றுக்கணக்கான சேர்பிய மக்களின் உயிர்களும் அவர்களின் வாழ்வுக்கான ஆதாரங்களும் உள்ளக கட்டுமானங்களும் அழிக்கப்பட்டு வருகின்றன என்பதில் கரிசனை கொள்வது மட்டுமல்ல, நேட்டோவின் தாக்குதல்களுக்கான நோக்கத்தையும் நாம் கேள்விக்குள்ளாக்க வேண்டும்.

இன்று ஆக்கிரமிப்பு படைகளினால் அடக்கப்பட்டும் உரிமைகள் மறுக்கப்பட்டும் அல்லலபடுவது கொசோவா மக்கள் மட்டுமல்ல, உலகெங்கும் நூற்றுக்கணக்கான தேசங்கள் அந்நிய படைகளின் ஆக்கிரமிப்பின் கீழ் அடக்கி வைக்கப்பட்டிருக்கின்றன, தமது விடுத-லைக்காக பல பத்தாண்டுகளாக துயர் நிறைந்த போராட்டங்களை நடத்தி வருகின்றன. எனினும் இம்மக்கள் மீது காட்டப்படாத அக்கறை, தேர்ந்தெடுக்கப்பட்ட சில சமூகங்கள் மீது மட்டும் ஏன் காட்டப்படுகின்றன என்பதற்கான உண்மையை நாம் விளங்கிக் கொள்ள வேண்டும்.

சர்வதேச தலையீடு என்ற பெயரில் அமெரிக்காவின் தலைமையில் மேற்கொள்ளப்படுகின்ற தலையீடுகள் அனைத்தும், ஒன்றில் அமெரிக்காவிற்கும் மேற்கு நாடுகளுக்கும் அச்சுறுத்தலாக அமைந்திருக்கின்ற அரசுகளுக்கு எதிரானதாகவோ அல்லது இந்நாடுகளுக்கு சாதகமாக செயற்படுகின்ற அரசுகளை பாதுகாப்பதற்காகவோதான் அமைந்திருக்கின்றன: பொஸ்னிய மற்றும் கொசோவா விவகாரங்களில் சேர்பிய அரசுக்கெதிராக, குவைத் மற்றும் குர்திஷ் விவகாரங்களில் ஈராக்கிய அரசுக்கெதிராக (எனினும் குர்திஷ்களை அடக்கி வருகின்ற துருக்கிய அரசுக்கெதிராக அல்ல), பலஸ்-தீன விவகாரத்தில் இஸ்ரேலுக்கு சாதகமாக.... என இப்போக்கு அமைந்திருக்கின்றது.

அமெரிக்காவும் அதன் நேட்டோ கூட்டாளிகளும் தமக்கு முற்றிலும் சாதகமாக அமைய கூடிய விதத்திலேயே பிற நாடுகளின், சமூகங்களின் விவகாரங்களில் தலையிடுகின்றன. எத்தகைய கொடுமைகளை தடுக்க முயற்சிக்கின்றோம் என்று உலகை நம்ப செய்கின்றனவோ, அவற்றை விட மோசமான கொடுமைகளை, தாம் தலையிடுகின்ற நாட்டில் நேரடியாகவோ, அல்லது மறைமுகமாகவோ நடத்துகின்றன: தாம் தலையிடுகின்ற நாட்டு மக்களின் உரிமைளையும் இறைமையையும் தமது காலடிகளின் கீழ் மிதித்து, துவைக்கின்றன. உலகின் கோரிக்கைகளையெல்லாம் உதாசீனப்படுத்தி விட்டு, தமத நோக்கங்களை எவ்வழியிலாவது சாதிப்பதில் குறியாக இருக்கின்றன, ஈற்றில், அங்கு மிக கடுமையான அழிவுகளை ஏற்படுத்தி விட்டு, அந்நாட்டு மக்களை தமது கட்டுப்பாட்டின் கீழ் தொர்ந்தும் தங்கியிருக்க வேண்டிய கட்டாயத்திற்குள்ளாக்குகின்றன.

எனவே நாம் தெளிவாக இருப்போம்: எமது போரட்டத்தில் அந்நிய தலையீடு ஏற்படுமாயின், அது இங்குள்ள அனைத்து மக்களுக்கும் கொடிய அழிவுகளையும் சேதத்தையும் விளைவிக்கும் என்பதையும் எமது இறைமை எம்மிடமிருந்து முற்றாகவே பறிக்கப்பட்டு விடும், அத்தோடு இத்தனை வருட கால எமது மக்களின் அர்ப்பணிப்புகளும் இழப்புகளும் அர்த்தமற்றதாகி விடும் என்ற உண்மைகளையும் நாம் புரிந்து கொள்வோம்.

எனினும் எமது போராட்டத்தின் வெற்றிக்கு சர்வதேச சமூகங்களின் ஆதரவும் அனுதாபமும் முக்கியம். நமது விடுதலையை அடைவதற்கு மட்டுமன்றி, ஒரு இறைமைமிக்க மக்கள் குடியரசை நாம் கட்டியமைப்பதற்கும் சர்வதேச சமூகங்களின் பக்க துணை எமக்கு அவசியம். பிற்போக்கு, ஆதிக்க அரசுகளின் தலையீடு அல்ல, அங்குள்ள மக்களின் ஆதரவே எமது போராட்டத்தின் வெற்றிக்கும் நாம் உண்மையான சுதந்திரத்தையும் இறைமையையும் அனுபவிப்பதற்கும் உதவும். இத்தகைய ஆதரவையும் அனுதாபத்தையும் எமது போராட்டத்தின்பால் திருப்புவோம், திரட்டுவோம். எமது போராட்டத்தின் நியாயத்தன்மையையும் ஒரு தனியான தேசஅரசை அமைப்பதற்கு எமக்குள்ள பிரிக்க முடியாத உரிமையையும் சர்வதேச [illegible] ஆதரவும் அனுதாபமும் வேண்டுகோள்கள் மூலம் பெறப்படுவதில்லை. மாறாக, எமது போராட்டத்தில் நாம் கொண்டிருக்கின்ற நம்பிக்கை, ஈடுபாடு, அர்ப்பணிப்பு என்பவற்றினாலும் போராட்ட பாதையில் நாம் வெளிப்படுத்துகின்ற முற்போக்கான, ஜனநாயக பண்புகளினாலுமே இவை ஈட்டப்படுகின்றன.

எனவே நமது விடுதலைக்கு அந்நிய தலையீட்டில் நம்பிக்கை கொள்வதை தவிர்ப்போம்! ஆதிக்க அரசுகள் எதுவுமே உண்மையான விடுதலையையும் சுதந்திரத்தையும் இறைமையையும் நாம் அனுபவிப்பதற்கு இடம் தரமாட்டாது என்பதை பிரக்ஞைபூர்வமாகவும் தெளிவாகவும் உணர்ந்து கொள்வோம்.

நமது அரசியல் தலைவிதியை நமது சொந்த கரங்களில் எடுப்போம்! மக்கள் அனைவரினதும் பங்குபற்றுதலுடன் நமது போராட்டத்தை நாமே முன்னெடுப்போம். சுதந்திரமும் இறைமையும் கொண்ட புதிய தேசமாக நிர்மாணிப்போம்!

## அதிகரித்துவரும்...

இவற்றைவிட, கணவனின் ஓய்வூதியத்தை பெண்ணின் பெயருக்கு மாற்றுவதிலுள்ள சிக்கல்கள, கணவன் இல்லாத பெணகள், வன்புணர்ச்சிக்குள்ளான பெண்கள், வேறு துணையுடன் வாழும் பெண்கள்... போன்றோருக்கு பிறக்கின்ற குழந்தைகளின் பெயர்களை பதிவதிலுள்ள சிக்கல்கள். பெண்ணின் கடவுச் சீட்டில் பிள்ளையின் பெயரைப் பதிவதற்கும் ஆணின் அனுமதிக் கடிதம் தேவைப்படுகிறது.

இன்றைய யுத்தமும் அதன் விளைவான நமது சமூகக் கட்டமைப்பிற்குள் ஏற்பட்டிருக்கும் பல்வேறு மாற்றங்களும் பெண்களை சமூக அரங்கிற்குக் கொண்டு வந்துள்ளது. குறிப்பாக குடும்பப் போஷகர்களான பெண்கள், தாம் சார்ந்த குடும்பங்களை தமது பெயரால் அடையா-ளப்படுத்தும் நிலைக்கு வந்துள்ளனர். இந்நிலையில் நடைமுறைக்கு ஒவ்வாத நிர்வாக முறைகளை தொடர்ந்தும் கடைபிடிப்பதும் அவற்றால் பெண்களை தொடர்ந்தும் துன்பங்களுக்குள்ளாக்குவதும் கொடுமையாக தெரியவில்லையா? (நமது நிர்வாக முறைகள் ஆணாதிக்க சிறிலங்கா அரசின் நிர்வாக முறைகளேயாயினும் இவை தொடர்பாக நாம் விழிப்பைப் பெற்றிருப்பது முக்கியமாகும்.) எதிர்காலம் தொடர்பாக எமக்குப் பல திட்டங்கள் இருக்கலாம். ஆனால் நடைமுறையில் எதிர்கொள்ளும் தடைகளை எதிர்கொண்டு கடந்து செல்லும் விதத்தில் சமூக வடிவங்களிலும் நிர்வாக முறைகளிலும் நெகிழ்ச்சிகள் தேவைப்படுகின்றன.

கணவனை இழந்த பெண்ணுக்கு ( பெண் போஷகர்களுக்கு) செலுத்தப்பட வேண்டிய விசேட அக்கறை:

"பெண்ணை ஆணின் வாழ்வுடன் தொடர்புபடுத்தக் கூடாது, [illegible] பெண் சுயாதீனமானவள்" எனவும் நாம் மேலே விவாதித்தோம். தற்போது கணவனை இழந்த மற்றும் கணவன் இல்லாத பெண்ணுக்கு விசேட அக்கறை செலுத்தப்பட வேண்டுமெனக் கூறுகிறோம். இதை ஒன்றுக்கொன்று முரணானதாக நீங்கள் கருதலாம்.

பெண் என்பவள் சுயாதீனமானவள் எனும் வகையில் அவளை ஆணுடன் தொடர்புபடுத்தி அடையாளப்படுத்துவது பிழையானது. பெண்ணின் வாழ்வில் ஆண் அதிகளவில் தாக்கம் ஏற்படுத்தும் சமூக முறைமை காரணமாக தனது கணவனை இழந்ததும் பெண் சமூக, பொருளாதார ரீதியாக பலவீன நிலைக்குத் தள்ளப்படுகிறாள். இந்நிலையில் பெண்ணுக்கு விசேட அக்கறை செலுத்தப்பட வேண்டியது அரசினதும் சமூகத்தினதும் கடமையாகும். நமது சமூகத்தில் பெண்கள் கணவனை இழப்பது வெறும் இயற்கை நிகழ்வாயில்லை. அது நமது தேச அரசியலின் பிரதிபலிப்புமாகும். அவ்வகையில் பெண் போஷகர்களின் பிரச்சினையை தனிநபர் பிரச்சினையாக அல்லாது நமது தேசத்தின் எரிகின்ற பிரச்சினைகளிலொன்றாக அணுக வேண்டும். இன்று நமக்கென தேச அரசொன்று இல்லாத நிலையில் அரசை அமைப்பதற்காக போராடும் தரப்பினர்களும் சமூகமுமே இப்பொறுப்பை ஏற்கவேண்டிய-வர்களாகும். இது நமது கடமையாகும்.

பெண் போஷகர் எனும் சொல் குடும்பப் பொருளாதாரத்தை சுமப்பவர் எனும் ரீதியில், பொருளாதார அர்த்தத்தில் பெண்ணை அடையாளப்படுத்துகிறது. இது கணவனைப் பிரிந்துவாழும் பெண்ணுக்கும் பொருந்தும். தமிழீழத்தில் உருவாகும் மக்கள் குடியரசு குழந்தைகளையும் முதியவர்களையும் பொறுப்பேற்கும். அந்நிலையில் பெண்ணின் போஷகர் பாத்திரமும் இயல்பாக இல்லாது போகும். அத்துடன் இந்த அடையாளப் பெயரும் படிப்படியாக சமூக உரையாடலிலிருந்து மறைந்துவிடும்.

அத்தகைய அரசு உருவாவதற்கு முன்னர் கடந்து செல்லும் காலகட்டமொன்றுள்ளது. அதில் பெண்ணுக்கு கூடுதல் மனநிம்மதியையும், சமூக - பொருளாதார வளங்களையும் ஏற்படுத்தும் விதமாக , நிலவி வரும் சமூக அமைப்பு முறைமையில் நெகிழ்வுகளை ஏற்படுத்த வேண்டிய அவசியம் எழுந்துள்ளது. இதை விடுதலைப்போராட்டத்தை முன்னெடுக்கும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அரசியலும் அறநெறியும்

## (Ethics and Politics)

தற்கால புரட்சிகர அரசியலைப் பொறுத்தவரை, முக்கியத்துவம் வாய்ந்-ததும் செல்வாக்குச் செலுத்தக் கூடியதாகவும் உள்ள இன்னொரு பிரிவாக அரசியலும் அறநெறியும் பற்றிய சேகுவேராவின் ஆய்வு அமைகின்றது. இது பல வடிவங்களை எடுக்கின்றது. முதலாவாக தலைவர்களுக்கும் அணிகளுக்கும் (Followers) இடையே நிலவுகின்ற இடைவெளிக்கு (படிநிலை) எதிரான போராட்டமுறை. இரண்டாவதாக தலைவர்களுக்கும் பின்பற்றுபவர்களுக்கும் இடையே காணப்படுகின்ற அதிகாரத்துவக் கட்டமைப்புக்கும், சலுகை வேறுபாடுகளுக்கும் எதிரான போராட்டம் பற்றிய கருத்து. மூன்றாவதாக தலைமை நிலைகளில் உள்ளவர்கள் அதிகாரத்தைப் பயன்படுத்துகின்ற அதே நேரத்தில் மக்களின் நாளாந்த பணிகளிலும் வாழ்க்கையிலும் பங்குபற்றுகின்ற நடைமுறை. நான்காவதாக இலக்குகளும் வழிமுறைகளும் நெருககமாக உள்ள விதத்தில் செயற்படுதல். ஐந்தாவதாக அதிகார வழியில் அல்லாமல் முன்மாதிரியாக அமைவதன் மூலம் கற்பித்தல்.

சேயின் தனிப்பட்ட வாழ்க்கை மிகவும் எளிமையானது, அவரது அரசியல் செல்வாக்கு செல்வத்தினதும் சலுகைகளினதும் திரட்சியினால் ஏற்பட்டதல்ல. புரட்சிக்கு பிந்திய அவருடைய வாழ்வில் சன்டினிஸ்டா "பினாட்டா" (Sandinist -Pinata) எதுவும் இருக்கவில்லை. புரட்சி என்பது, முழு வர்க்கத்தாலும் முன்னெடுக்கப்பட்ட சமூக முன்னேற்றங்களாக இருந்ததே தவிர தனிப்பட்டவர்களின் செல்வாக்கையும் நலன்களையும், உயர்த்துவதற்கானதாக இருக்கவில்லை. தலைவர்களுக்கும் பின்பற்றுபவர்களுக்கும் இடையே பொருளாதார இடைவெளி குறைவாக இருக்கும் போது, அவர்கள் ஒரே விதமான பிரச்சினைகளைப் பகிர்ந்து கொள்வதும், ஊழியர்கள் முகம் கொடுக்கின்ற அதே விதமான தேவைகள் மற்றும் பிரச்சினைகளையே தலைவர்களும் முகம் கொடுப்பதும் அதிகமாகின்றது. பொருளாதார இடைவெளி குறைவாக இருக்கும் போது, நேரடித் தொடர்புகளுக்கும், நெருக்கத்திற்கும் குறைந்த தடைகளே உருவாகும், பரஸ்பர கண்ணோட்டங்களுக்கான சாத்தியம் அதிகமாகும் சொந்த நலன்களைப் பேணிச் கொள்வதற்காக, பாய்ந்து திரிகின்ற சந்தர்ப்பவாதிகள் தமது அரசியலை நடத்துவதற்கான இடமாக, புரட்சிகர இயக்கத்தைப் பாவிப்பதற்குரிய வாய்ப்பு குறைவாகும்.

இன்று, பரஸ்பரத் தன்மை கொண்ட பொருளாயத நிலைமைகள் பற்றிய சேயின் நடைமுறையானது (Practice of shared material conditions) முக்கியமான புதிய புரட்சிகர அமைப்புக்கள் அனைத்திலும் நடைமுறைப் படுத்தப்படுகின்றது. பிரேஸிலின் ஆளுவு தலைவர்கள், பொலிவியாவின் கொசாலெரஸின் தலைவர்கள், பரகுவேயின் விவசாய கூட்டணியின் தலைவர்கள், தமது வெகுஜன ஆதரவாளர்கள் வசிக்கின்ற அதே வகையான வீடுகளில் வசிக்கிறார்கள், உணவு உண்கிறார்கள், ஆடை அணிகிறார்கள். தலைமையின் மகிழ்ச்சி, பொருளாயத சிறப்புக்களிலோ, அல்லது சலுகைகளிலோ காணப்படவில்லை, மாறாக, இயக்கத்தின் தீவிர செயற்பாட்டளர் என்ற ஒரே வகையான தகைமையின் கீழ், ஒருவரின் வாழ்க்கைக்கான வாய்ப்புக்களை உருவாக்குவதிலும், அதிகரிப்பதிலுமே தலைமைக்குரிய மகிழ்ச்சி அமைந்திருக்கின்றது. சிறந்த தலைமையானது, கட்சி ஊழியர்கள் மத்தியில் கௌரவிக்கப்படுவதன் மூலமும், மதிக்கப்படுவதன் மூலமும், தலைமைப் பொறுப்புகள் வழஙகப்படுவது மூலமும் சிறப்பிக்கப்படுகின்றது.

ஆற்றலும் திறமையும் வாய்ந்த அமைப்புக்காகப் போராடியதன் மூலமும், நடைமுறை பணிகளிலும், உடல் உழைப்பிலும் ஊழியர்களை ஈடுபடுத்தியதன் மூலமும் நிறைவேற்றப்படக்கூடிய பணிகளில் சராசரி மக்களை ஈடுபடுத்தி அவர்களுக்கு அறிவூட்டி உருவாக்கியதினூடாகவும் "அதிகாரத்துவ அமைப்புக்களுக்கும்" முறைமைகளுக்கும் எதிராக சே தொடர்ச்சியாகப் போராடினார். அதிகாரத்துவத்திற்கு எதிரான இத்தகைய போராட்டமானது தன்னியல்பானதாக இருக்கவில்லை, இது கடின உழைப்பு (extra effort) மற்றும் தனிப்பட்டவர்களின் முன் முயற்சி என்பவற்றையும் அமைப்புக்களையும், கட்டுப்பாட்டையும் கோரின.

படைப்புத்திறனுடைய வேலைகள் (productive work) குறித்து, சே உறுதியான நம்பிக்கை கொண்டிருந்தார், அதாவது மக்களின் நாளாந்த கவலைகளைப் புரிந்து கொள்வதற்கான பிரதான திறவு கோலாக, மூளை மற்றும் உடல் உழைப்புக்களை ஒன்றிணைப்பது அமையும் என்று சே கருதினார்.

தொழில் துறை நிபுணர்கள் (professionals) மற்றும் புத்திஜீவிகள் மத்தியில் நிலவுகின்ற வர்க்க மனோபாவங்களைத் தகர்ப்பதிலும், கலாச்சார செயற்பாடுகளை மேற்கொள்வதில் உபரியானது எவ்வாறு தூண்டுகோலாக அமைந்திருக்கின்றது என்பதை அவர்களுக்கு விளக்குவதிலும் சுய விருப்புடனான உழைப்பு (volunteer labour) ஒரு முக்கிய மூலக்கூறாக விளங்குவதை சே கண்டார். மிக அடிப்படையாக, இந்த நடைமுறையானது உடல் மற்றும் மூளை உழைப்பாளர்களிடையே பிணைப்புக்களை உருவாக்குவதிலும், புத்திஜீவிகளின் உயர் நிலையின் அடிப்படையில் புதிய வர்க்கம் ஒன்று உருவாவதைத் தடுப்பதிலும் முக்கியமானது என்று அவர் கண்டார்.

சேயின் நடைமுறையில் தனிப்பட்ட பண்புகளும் அரசியல் பண்புகளும் இணைக்கப்படுகின்றன. சியாரா மெஸ்ட்ராவில் இரகசியப் பொலிசுக்காக உளவு வேலையில் ஈடுபட்ட ஒருவனிடமிருந்து தகவல்களைப் பெறுவதற்காக சித்திரவதையை மேற்கொள்ள முயற்சித்த தோழர்களை சே தடுத்தார். மனிதாபிமான முறைமையை ஏற்படுத்துவதற்காக முன்னெடுக்கப்படுகின்ற புரட்சியின் நோக்கத்தை, சித்திரவதையை மேற்கொள்வது தடுத்து விடும் என்று சே வாதிட்டார். மேலும் சித்திரவதையை மேற்கொள்வதானது அதைப் பயன்படுத்துகின்ற புரட்சியாளர்களை கறைப்படித்திவிடும் என்று அவர் வாதிட்டார். அதைபோன்று புரட்சிகரப் போரின் போது பொதுவான கைதிகளாக பிடிபட்டவர்கள் இந்த சமூக அமைப்பின் குற்றவாளிகளே என்று அடையாளப்படுத்தி அவர்களை சே அடிக்கடி விடுவித்தார். அவர்களில் சித்திரவதை செய்தவர்களும், கடுமையான குற்றமிழைத்த அதிகாரிகளும் மட்டுமே மரண தண்டனைக்குற்படுத்தப்பட்டார்கள்.

மனிதாபிமான முறைமையை ஏற்படுத்துவதற்காக முன்னெடுக்கப்படுகின்ற புரட்சியின் நோக்கத்தை, சித்திரவதையை மேற்கொள்வது தடுத்து விடும் என்று சே வாதிட்டார். மேலும் சித்திரவதையை மேற்கொள்வதானது அதைப் பயன்படுத்துகின்ற புரட்சியாளர்களை கறைப்படித்திவிடும் என்று அவர் வாதிட்டார்.

புரட்சிகர நிறுவனங்கள், புதிய சமூகத்திற்குரிய உறவுகளை உருவாக்க வேண்டும் என்றும் அதற்கான நடவடிக்கையில் ஈடுபட வேண்டும் என்றும் சே கருதினார். இன்று என்ன செய்யப்படுகின்றது, எப்படி செய்யப்படுகின்றது என்பதே எதிர்காலத்தில் என்ன உருவாகும் என்பதை வடிவமைக்கின்றது என்ற கருத்தை "புதிய மனிதன்" என்ற தனது நம்பிக்கையின் அடித்தளமாக சே கொண்டிருந்தார். மக்களை ஊக்கப்படுத்துவதற்காக வர்த்தக விலைகளை நிர்ணயிப்பதோ அல்லது வேறு ஏதாவது தூண்டல்களோ ஒரு கம்யூனிச சமூகத்தை படைத்துவிடும் என்ற சோவியத் நம்பிக்கையை அவர் ஏற்றுக் கொள்ளவில்லை. மாறாக அரச சொத்தின் தோற்றத்திற்கு அடியிலே சோவியத்துக்கள் முதலாளித்துவ மனோபாவத்தை உருவாக்கிக் கொண்டிருக்கின்றன என்று சே சரியாக அனுமானித்தார். இவ்வாறு சோவியத் கம்யூனிசத்தின் வீழ்ச்சியையும் முதலாளித்துவ சித்தாந்தத்தின் திடீர் எழுச்சியையும் மாபெரும் தூரதிருஷ்டியுடன் அவர் எதிர்பார்த்தார். "மக்களின் கண்களில் டொலரைக் காட்டி கொம்யூனிசத்தை நீ கட்டியமைக்க முடியாது" என்று சேயும் காஸ்ரோவும் வலியுறுத்தினார்கள். இவ்வாறு கூறுவது சேயின் கண்ணோட்டத்தில், பொருளாயத முன்னேற்றங்கள் முக்கியமானவையாக இருக்கவில்லை என்ற அர்த்தத்தில் அல்ல. பதிலாக விளைவைப் போன்று- அதாவது பொருளாதார முன்னேற்றம்- அது அடையப்பட்ட முறையும் (சம முயற்சியின் அடிப்படையில் அமைந்த கூட்டு - முன்னேற்றத்திற்கான கூட்டு போராட்டம்) முக்கியமானதுன்பதையே சே வலியுறுத்தினார்.

முன்மாதிரியாக அமைந்து கற்பித்தல் என்பது சேயின் வழிகாட்டும் கொள்கையாகும். கெரில்லா போராட்டங்களில் அவர் தீவிரமாக பங்கு கொண்ட வேளையில், ஏனையோர் அனுபவித்துது போன்ற அதே கஷ்டங்களில் துன்பட்டார். அதே ஆபத்துக்களுக்குட்பட்டார். தனது கடுமையான உடல் உபாதைகளிலும் கூட (ஆஸ்த்மா), அவர் விஷேட சலுகைகளை கோரவில்லை. உண்மையில் அவர் தன்னைக் கடுமையாக வருத்திக் கொண்டார், மிக நீண்ட நேரம் வேலை செய்தார். குறைவாகத் தூங்கினார். தன்னுடைய தவறுகள் மற்றும் குறைபாடுகள் குறித்து கடுமையாக சுய விமர்சனம் செய்தார். கற்றல் என்பது ஒருவர் என்ன சொன்னார் என்பதிலிருந்து மட்டுமன்றி அவர் என்ன செய்தார் என்பதையும் அடிப்படையாகக் கொண்டதாக அமைய வேண்டும் என்பதே அவரது கற்பித்தல் முறையாக இருந்தது. கருத்துக்களின் மீதான நம்பிக்கையையும் உறுதியையும் ஏனெனில் ஒரு தலைவர் என்ன சொன்னார் அல்லது உறுதியளித்தார்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

தமிழீழம்

அரசியல் தலைமை மக்களதே !!

'The Editor'
BM Box 4002
London. WC IN 3XX
United Kingdom

புரட்சிகர வணக்கங்கள்!

தமிழீழம் பத்திரிகைக்கு நீங்கள் வழங்குகின்ற ஆதரவும் ஆலோசனைகளும் விமர்சனங்களும் எமக்கு உற்சாகத்தை தருகின்றன, நம்தேசத்தின் விடுதலை போராட்டம் புதிய பரிமாணத்தை பெறும் என்ற நம்பிக்கையை உறுதியாக்குகின்றன. அதேவேளை இப்பத்திரிகையின் வடிவமைப்பு குறித்தும் அதன் அழகியல் தன்மை குறித்தும் உங்களிடமிருந்து விமர்சனங்களையும் பெற்றிருக்கிறோம். இந்தவிடயத்தில் நாம் அனைவரும் தெளிவாக இருப்போம்: சிறீலங்கா அரசின் ஆக்கிரமிப்புக்கு எதிராக வீரமுடன் போராடிக்கொண்டும் அதன் அடக்குமுறைகளை தீரத்துடன் எதிர்கொண்டும் வருகின்ற ஒரு தேசத்தின் பத்திரிகை இது என்பதை உணர்ந்து கொள்வோம். எனவே உள்ளடக்கத்தில் மட்டுமல்ல, வடிவத்திலும் கூட எமது தேசத்தின் அரசியல் குரலாய் அதன் போராட்ட உணர்ச்சியாய் வெளிப்படுகின்ற கடமையை தமிழீழம் பத்திரிகை கொண்டிருக்கின்றது. இத்தகைய புரிதல் இப்பத்திரிகையுடனான உங்கள் உறவில் புதிய பரிமாணத்தை ஏற்படுத்தும் என்று நம்புகிறோம்.

சுதந்திர அரசை அமைப்பதற்கான நமது நீண்ட, உறுதிமிக்க போராட்டத்தில் புதிய அரசியல் கலாச்சாரம் அவசியமாகியிருக்கின்ற ஒரு கட்டத்தை நாம் அடைந்திருக்கிறோம். அரசியலில் பன்முக தன்மையை நிலைநாட்டுதல், எம்தேசத்தின் மத்தியில் ஜனநாயக நடைமுறைகள் தடையின்றி பின்பற்றப்படுகின்ற சூழலை உருவாக்குதல், மக்களின் அதிகாரமும் தலைமையும் உறுதிப்படுத்தப்பட்ட சமூக கட்டமைப்பை ஏற்படுத்துதல்....என புதிய பரிமாணங்கள் செயற்படுகின்ற சமூக, அரசியல் சூழல் எமக்கு அவசியமாகின்றது. இதனூடாகவே மக்களின் நேரடி பங்குபற்றுதலுடன் இணைந்த போராட்டங்களை முன்னெடுப்பதும் சிறீலங்கா அரசின் கடைசி சுவட்டையும் எமது தேசத்திலிருந்து அகற்றுவதும் சாத்தியமாகும்.

இவ்வாறான ஒரு அரசியல் சூழலை உருவாக்குவதற்கான உயிர்விதைகள் ஏற்கனவே முளைவிட தொடங்கியுள்ளன. ஆம்! தமிழீழத்தில் இடம்பெற்று வருகின்ற மாணவர் போராட்டங்கள், பெண்கள் ஆர்ப்பாட்டங்கள், வெகுஜன ஆர்ப்பாட்டங்கள்.... போன்றவையும் தமிழ்மக்களினால் சிறீலங்காவில் மேற்கொள்ளப்படுகின்ற ஆர்ப்பாட்டங்களும், சிறீலங்கா அரசுக்கெதிராக தமிழ்த்தேசத்தில் கருக்கொண்டுள்ள வெகுஜன எழுச்சியின் ஆரம்ப அதிர்வுகளே. இத்தகைய எழுச்சிகள் அரசியல்மயப்படுத்தப்பட்டு, ஒன்றிணைக்கப்படும்போது, எமது போராட்டமானது அதன் உயர்ந்த கட்டத்தை, மக்களின் தலைமை நிலைநாட்டப்படுகின்ற ஒரு புதிய பரிமானத்தை அடைவது திண்ணம். அப்போது இங்கு நிகழவிருப்பது எமது தேசத்தின் விடுதலை மட்டுமல்ல, புதிய, உயர்ஜனநாயக விழுமியங்களை அடிநாதமாக கொண்ட சமூகஅமைப்பின் உருவாக்கமும்தான்.

எமது போராட்டத்தின் ஒரு திருப்புமுனையில், தனது பாதத்தை உறுதியாக பதித்த ஒரு போராளியை நாம் இங்கு நினைவு கூர்கிறோம். சிறீலங்கா அரசின் அடக்குமுறையிலிருந்து நமது தேசம் விடுபடுவதற்கு, ஆயுதமேந்திய போராட்டப்பாதை அவசியம் என்பதை நடைமுறையில் நிரூபித்த சிவகுமாரனை நாங்கள் கௌரவமாக நினைவு கூர்கிறோம். அதேபோன்று, தென்னாபிரிக்க கறுப்பின மக்களின் தலைவராய் உயர்ந்து நிற்கின்ற நெல்சன் மன்டேலா, ஜனாதிபதி பதவியிலிருந்து விலகி செல்வதையும் நாங்கள் கௌரவப்படுத்துகிறோம். ஒரு உண்மையான மக்கள் தலைவர், போராட்ட களத்திலும் ஆட்சி அதிகாரத்திலும் எவ்வாறு நடந்து கொள்ள முடியும் என்பதற்குரிய உயிருள்ள சான்றாக, எம் காலத்தின் ஜனநாயக பிம்பமாக வாழ்ந்து காட்டிய ஒரு மக்கள் தலைவருக்கு, தமிழ்த்தேசத்தின் சார்பில் பிரியாவிடை கூறுவதில் பெருமிதமடைகிறோம்.

## மக்கள் களம்...

- தமிழீழம் பத்திரிகை வாசித்த போது சரியான காலத்தேவைக்கு ஏற்ப போராட்ட சக்தியொன்று உருவாகியிருப்பதான நம்பிக்கை எற்பட்டது. முதலில் சரியான கருத்துக்கள் மக்கள் முன் வைக்கப்படவேண்டும் என்ற தேவையை நீங்கள் வலியுறுத்துவதிலிருந்தே உணர முடிகின்றது. பத்திரகையின் வடிவமைப்பு சிறப்பாக உள்ளது. நம்பிக்கை தரக்கூடியதாக உள்ளது.

  கலைமகள்.
  வவுனியா

- பத்திரிகை வந்து சேர்ந்த விதம் இது பத்தோடு பதினொன்று அல்ல என்பதை காட்டியது. தமிழீழம் என்ற பெயரும் உள்ளடங்கியுள்ள விடயங்களும் ரிஸ்கானதாகும்.

  அன்சார்
  கல்முனை

- இப்பத்திரிகை இக்காலகட்டத்திற்கு தேவைப்படும் விடயங்களை சுமந்து வந்துள்ளது. இதனை வரவேற்க வேண்டும். ஆனால் இவர்கள் தமிழீழத்தில் நடைமுறையில் வேலைகளை ஆரம்பித்து செய்தால்தான் இவர்களை சரியாக புரிந்து கொண்டு ஆதரவளிக்கலாம்.

  சுதர்சனன்,
  கொள்ளுபிட்டி

- பத்திரிகையில் நன்றாக சொல்வார்கள். குறிப்பிட்ட காலத்தில் அதையே வியாபாரமாக்கிவிடுவார்கள்.

  கணபதிபிள்ளை
  மட்டுநகர்

- தமிழீழ விடுதலைப்போராட்டத்தை குழப்ப சிறிலங்கா அரசு, இந்திய அரசு போன்றவற்றால் உருவாக்கப்பட்டதோ தெரியவில்லை.

  சிறிதரன்
  திருமலை

- உங்கள் நோக்கங்கள் சரியானவைதான் . முதலில் இருந்து தொடங்கப்போகின்றீர்களா? நமது மக்கள் இந்த சுமைகளை தாங்கிக்கொள்வார்களா?

  சிவராமலிங்கம்
  மண்டபம் முகாம்
  சென்னை

- எழுத்துகள் அளவு மிகவும் சிறிது, வடிவமைப்பில் கவனம் தேவை. கருத்துக்கள் பெறுமதி மிக்கவை.

  விமலநாயகம்
  சுவீஸ்

- நீங்கள் 90 களின் தொடக்கத்தில் வந்திருக்க வேண்டும். இன்று பல போராட்ட சக்திகள் நான் உட்பட சோந்துவிட்ட நிலையில் உள்ளனர். இருந்தும் கருத்துகள் எம்மை தட்டியெழுப்புகின்றன.

  சங்கரன்
  கனடா